# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2306/05 - 2022 නොවැම්බර් මස 14 වැනි සඳුදා - 2022.11.14**

2306/05 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கோப்பிலக்கம்: கடு/காணி/01/142/ WS.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4/3/9/2016/WS/ 533.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கடுவலை பிரதேச செயலகப் பிரிவில், 479/ஈ, படபொத கிராம அலுவலர் பிரிவில் படபொத கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப நில வரைபடத்தின் இலக்கம் 522028 என குறிப்பிடப் பட்டுள்ள 0.0410 ஹெக்டயார் விஸ்தீரணத்தை யுடைய கீழே விபரிக்கப்பட்டுள்ள காணிப் பகுதி.

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: ஹிக்கஹவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0410 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித்துண்டுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை / ஆட்சி உரிமையை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஷதுர மிஹிதும்,
பிரதேச செயலாளர்,
கடுவலை.

பிரதேச செயலகம்,
கடுவலை.
2022, நவெம்பர் 03.

EOG 11 - 0121



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/18/2019/ WS/540.
எனது குறிப்பு இல.: 3/6/2017/WS/ 1-viii.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், பொல்கஹவெல பிரதேச செயலகத்தில் அமுணுகம, இல. 884 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அ. து. சர்வே ஜனராலினால் தயாரிக்கப்பட்ட 1492 இன் துணை 13 இன் தாள் 11 மற்றும் 2022.10.25 ஆந் திகதியிடப்பட்ட காணியின் விபரம் பின்வருமாறு:

01. **துண்டு இல. 290**

காணியின் பெயர்: மெல்வத்த; உரிமை கோருவோர்: நிலச் சீர்திருத்த ஆணையகம்; விஸ்தீரணம்: 0.2150 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித்துண்டுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 05 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பொல்கஹவெல பிரதேச செயலகத்தில் என் முன்னர் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை / ஆட்சி உரிமையை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. அனோமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவெல.

பிரதேச செயலகம்,
பொல்கஹவெல.
2022, நவெம்பர் 09.

EOG 11 - 0122

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: பிசெஅங்/காணி/08/காசு/ எச்டபிள்யூ/ 15.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/6/2019/ எச்டபிள்யூ/ 195.

2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதிய 2265/42 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இல. ஈஒஜீ 02 - 0377 இன் கீழான அறிவித்தலில் காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் உங்கள் பிரசன்னத்தை விரும்புகிறேன்.

இறுதிக் கிராம வரைபட இல. 255, பிற்சேர்க்கை இல. 28, தாள் இல. 35 இல் துண்டு இலக்கங்கள் 1739 - 1741 வரை விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0438 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய மூன்று (03) காணித் துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 1739 - காணியின் பெயர்: மைலதெனியமுகலான அல்லது இஹலதிகனெத் மகாஹேன; விபரம்: தரிசு நிலம்; ஆரம்ப உரிமை கோருவோர்: ஹேவா மானதுங்க நிஹால், ஹக்குருவெல, தலாம்பொருவ; விஸ்தீரணம்: 0.0073 ஹெக்டயார்.**

எல்லைகள்:

வடக்கு: துண்டு இல. 1738 மற்றும் 1447; கிழக்கு: துண்டு இல. 1450 மற்றும் 1740; தெற்கு: துண்டு இல. 1440 மற்றும் 1741; மேற்கு: துண்டு இல. 1469 மற்றும் 1738.

02. **துண்டு இல. 1740 - காணியின் பெயர்: கோங்கஹகொரட்டுவஹேன; விபரம்: வீதி மற்றும் திறந்த தரிசு நிலம்; ஆரம்ப உரிமை கோருவோர்: விஜேசேகர பத்திரணகே அமரசேன, ஹக்குருவெல, தலாம் பொருவ; விஸ்தீரணம்: 0.0351 ஹெக்டயார்.**

எல்லைகள்:

வடக்கு: துண்டு இல. 1739, 1447 மற்றும் 1450; கிழக்கு: துண்டு இல. 1450 மற்றும் 2ஏ; தெற்கு: துண்டு இல. 2ஏ, 1742 மற்றும் 1741; மேற்கு: துண்டு இல. 1741 மற்றும் 1739.

03. **துண்டு இல. 1741 - காணியின் பெயர்: மைலதெனியமுகலான அல்லது இஹலதிகனெத் மகாஹேன; விபரம்: வீதி மற்றும் திறந்த தரிசு நிலம்; ஆரம்ப உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0014 ஹெக்டயார்.**

எல்லைகள்:

வடக்கு: துண்டு இல. 1738, 1739 மற்றும் 1440; கிழக்கு: துண்டு இல. 2ஏ மற்றும் 1742; தெற்கு: துண்டு இல. 1442 மற்றும் 1467; மேற்கு: துண்டு இல. 1467, 1470 மற்றும் 1469.

2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு என மீள் விசாரணைத் திகதி திருத்தம் செய்யப்படுகின்றது

பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
அங்குனுகொலபெலஸ்ஸ.

பிரதேச செயலகம்,
அங்குனுகொலபெலஸ்ஸ.
2022, செத்தெம்பர் 20.

EOG 11 - 0125

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.